ஸ்ரீஜிநாய நம:

# மேருமந்திர புராணம்

மூலமும் உரையும்

## 9. பலதேவன் சுவர்க்கம் புக்க சருக்கம்

891. மந்திரி மன்னன் தம்மின் மாறுமா றாகிக் கீழ்மேல்
இந்தியம் ஐந்தும் செல்லும் எல்லையை முடியச் சென்றார்
வந்தவர் தம்மில் கூடும் அளவினின் றிளைய னாய
மைந்தனும் தாயும் உற்ற மாற்றுஇனி உரைக்க லுற்றேன்.

அமைச்சனான சத்தியகோடனும் அரசன் சிம்மசேனனும் வேறு வேறான குணங்களையுடையராய் இருந்தமையால், நற்குணமுடைய ஐந்து பொறிகளையுடைய ஜீவன் அடையும் நற்கதியின் மேல் எல்லையாகிய சர்வார்த்த சித்தியில் மன்னனும், தீய பண்புகளையுடைய ஐம்பொறி ஜீவன்கள் அடையும் கீழ் எல்லையாகிய, ஏழாம் நரகத்தில் சத்தியகோடனும் எய்தினர். அவர்கள் அந்த இடங்களிலிருந்து மீண்டும் இம் மண்ணுலகிற்கு வந்து சந்திப்பதற்குள், இளைய மகன் பூரணச் சந்திரன், அவன் தாய் இராமதத்தை இவர்கள் இருவரும் அடைந்த பிறவிகளைப் பற்றிக் கூறுகின்றேன், என்றான் ஆதித்யாபன்.

892. போதொடு தளிர்கள் செற்றிப் பொறிவண்டும் ஞிமிறும் பாடத்
தாதொடு மதுக்கள் வீயும் தாதகி யுடைய தீபம்
ஓதிய புகைகள் நானூ றாயிரம் உள்ள கன்று
வேதிகை இரண்டில் சக்க வாளத்தின் விளங்கு நின்றே.

மலர்களும், தளிரும், நெருங்கி வண்டுகளும், ஞிமிறும் சேர்ந்து, ஒலிக்க, மகரந்தத்துடன் தேன் சிந்தும் தாதகி மரங்களை நெருக்கமாகவுடைய தாதகிஷண்ட தீபமானது நான்கு லட்சம் யோசனை அகன்றதாகும். அதன் உட்புறத்திலும், வெளிப்பக்கத்திலும் லவண, காளோதக பெருங்கடல்களின் வேதிகைகள் சக்ரவாள மலையைப் போல் வட்டமாகச் சூழ்ந்து விளங்குகிறது.

893. மந்தரம் இரண்டும் மாண்ட குலமலை பன்னி ரண்டின்
அந்தரத்தாறு நாலே ழாம்அத னகத்துக் கீழ்பால்
மந்தர மதற்கு மேல்பால் சீதுதை வடக ரைக்கண்
கந்திலை என்னும் நாடு காமுறும் தகைய துண்டே.

அந்தத் தாதகி கண்டத்தின் கிழக்கே ஒரு மேருமலையும் மேற்கே ஒரு மேமலையும், குல மலைகள் பக்கத்திற்கு ஆறாகப் பன்னிரண்டும் பக்கத்திற்குப் பதிநான்காக இருபத்தெட்டு ஆறுகளும் பொருந்தியுள்ளன. கிழக்கு மேரு மலைக்கு மேற்கே ஓடும் சீதோதா நதியின் வட கரையில் அனைவரும் விரும்பத்தக்க நாட்டின் பெயர் கந்திலை என்பதாகும்.

894. விலங்கல்வீழ் அருவி வேழ மும்மதம் தேறல் வேரி
கலந்துடன் செல்லும் ஆறு கயந்தலைப் பட்ட காலைச்
சலஞ்சலம் பிரிந்த காத லார்தமைக் கண்ட போழ்தில்
அலங்கலம் குழவி னார்போல் அமர்ந்தினிது ஒழுகு நாட்டுள்.

அந்த நாட்டின் மலைவீழ் அருவி நீருடன், ஆண் யானைகளின் மும்மத நீரும், மலைத்தேனும் மற்ற நறுமணப் பொருள்களும் ஒன்று சேர்ந்து ஆறாக ஓடி மடுக்களை அடையும்போது மடுக்களிலுள்ள சலஞ்சலம் என்னும் சங்கினங்கள், தம்மைப் பிரிந்து சென்ற அன்புடைய காதலர்கள் திரும்பி வந்ததைக் கண்டு பொங்கும் மணமுடைய பெண்களைப் போல் காட்சி நிறைந்த நாடாக விளங்கியது.

895. கதலியின் குலைகள் செம்பொன் கொழுங்கனி கான்று நான்று
மதலையைச் செறிந்த வற்றை மயிலன்ன சாய லார்தம்
மதலையம் புதல்வர்க் குண்ணக் கொடுத்தெடுத் துவர்க்கும் செம்பொன்
குதலைஅம் மாட மூதூர் அயோத்திமா நகர மாமே.

அந்நாட்டில் நெடிது வளர்ந்த வாழை மரங்களின் பொன் போன்ற நிறமுடைய பழக்குலைகள் மாளிகை விளிம்பில் சாய்ந்திருக்கவும் மாடியில் உள்ள மயில் போன்ற மகளிர் குதலை மொழி பேசும் தங்கள் குழந்தைகளுக்கு அக்கனிகளை உண்ணும்படி கொடுத்து அவர்களை எடுத்துக் கொஞ்சும் மாளிகைகள் நிறைந்த நகரத்தின் பெயர் அயோத்தி என்பதாகும்.

896. இரவிபோல் தாப தீபத் திளையவர் வதன மென்னும்
அரவிந்தம் மலரத் தோன்றும் அரசன்தான் அருக தாசன்
வரைபுரை மாட மூதூர் மற்றிதற் கிறைவன் தேவி
சுரிகுழல் கருங்கண் செவ்வாய்த் தோகைசுவ் வதைஎன் பாளாம்.

மலைகள் போல் உயர்ந்த மாளிகைகள் நிறைந்த அயோத்தியின் அரசன் பொலிவு மிக்க அழகிய மகளிரின் முகத்தாமரையை மலர்விக்கும் கதிரவன் போன்ற புகழ் மிக்கவன், அருகதாசன் என்னும் பெயரினன். அவன் தேவி கருமையான கண்களையும், செந்நிற வாயினையும் உடையவள். மயில் போல் அழகுடைய அவள் பெயர் சுவ்வதை என்பது.

897. அச்சுதைக் கிறைவ னாய அரதன மாலை அந்தக்
கச்சணி முலையி னாட்குப் புதல்வனாய்ப் பிறந்த காலை
நச்சுவேல் வேந்தற் கஞ்சி மன்னவர் நடுங்க வையத்து
இச்சையை நிறைத்து வீத பயனிவன் என்று சொன்னார்.

அச்சுத கல்பத்து இந்திரனான இரத்தினமாலை கச்சணிந்த தனங்களையுடைய சுவ்வதைக்கு மகனாகப் பிறந்தவுடனே நஞ்சு கலந்த வேலையுடைய அருகதாஸ மன்னனிடம் மற்ற வேந்தர்கள் அனைவரும் அச்ச மெய்தினார். மகன் பிறந்ததும் மற்றவர் வறுமை நீங்குமாறு தானமளித்து புத்திரனுக்கு 'வீத பயன்' எனப் பெயர்ச் சூட்டினர்.

898. மற்றந்த மன்னன் தேவி வடிநுனைப் பகழி வாட்கண்
சிற்றிடைப் பரவை அல்குற் சினதத்தைச் சிறுவ னாகிச்
சுற்றிய காத லால்வந் திரதனா யுதனும் தோன்ற
வெற்றிவேல் வீரன் பேரும் விபீடணன் என்று சொன்னார்.

அடுத்து; அருகதாச மன்னனின் மற்றொரு மனைவியான கூரிய அம்பு போன்ற ஒளிமிக்க கண்களையும் நுண்ணிய இடையையுமுடைய சினதத்தையின் வயிற்றில் இரத்தினாயுதனாய் இருந்து பிறகு அச்சுத கல்பத்து அமரனானவன் தன் தேவ வாழ்வு முடிந்து, மகனாகப் பிறந்தான், அவனுக்கு 'விபீடணன்' எனப் பெயரிட்டனர்.

899. இராமகே சவர்க ளாகி ஷின்மதி நீல மேகம்
தரா தலத் திழிந்த போல்வார் தருமமும் புகழும் போன்றும்
கராமலி கடலின் ஓத மதியொடு பெருகும் வண்ணம்
பராபவம் பகைவர்க் காக்கும் படியினால் வளர்வு சென்றார்.

முழுமதியும் கார்முகிலும் இந்நிலவுலகில் இறங்கியதைப் போன்று பலதேவ வாசுதேவர்களாகி அறமும் புகழும் போலவும் முதலைகள் வசிக்கும் அலைகடலும் முழு மதியும் போலவும், அதாவது (சந்திரனைக் கண்டு பொங்கும் கடல் போலவும்) இணைந்து பகை வேந்தர்கள் மான பங்க மெய்துமாறு வளர்ந்தார்கள்.

900. குலமலை இரண்டு போலக் கொற்றவக் குமரர் ஓங்கி
நிலமகட் கிறைவ ராக நின்றதம் பகைவன் வெம்பி
மலைமிசைப் பருதி யோடு மால்கட லிரண்டு வந்து
நிலமிசைப் பொருவ போன்று நின்றுபோர் தொடங்கி னாரே.

குல மலைகள் போல விளங்கிய அரச குமாரர்கள் இருவரும் மன்னர்களாகிப் புகழ் பரவ நின்றதைக்கண்ட அவர்களுடைய பகைவனான பிரதி வாசுதேவன் மிகவும் சினம் கொண்டு, படை கொண்டு இவர்களுடன் மோதினான். மலைமிசை தோன்றிய கதிரவனுடன் சூழ்ந்துள்ள கடல்கள் இரண்டு ஒன்றுடன் ஒன்று மோதுவது போல் அந்தப் போர் நிகழ்ச்சிக் காட்சியளித்தது. கரிய மலை போன்ற யானை மேல் கதிரவன் போல், மன்னர்கள் அமர்ந்து அலைகடல் போல் படைகள் மோத கடும் போர் துவங்கினர்.

901. துரகங்கள் திரைக ளான சுறாஎறி வீர ரானார்
கரிமக ரங்க ளான கால்படை கடல தாகப்
பொருபடை வீரர் கைவாள் புரண்டெழு மீன்க ளாகக்
கரைசெறி நாவாய் தேராய்க் காவலர் காம ரானார்.

காலாட்படை கடலாகவும், அலைகள் குதிரைகளாகவும், படை வீரர்கள் சுறாமீன்களாகவும், யானைகள் முதலைகளாகவும் மாறினர். போர் வீரர்களின் கைவாள்கள் புரண்டு செல்லும் மீன்களாகவும், ரதங்கள் துறை நோக்கிச் செல்லும் கப்பல்களாகவும் மன்னர்கள் மாலுமிகளாகவும் தோன்றினர்.

902. வில்லொடு வில்வந் தெற்ற வேலொடு வேல்வந் தெற்ற
மல்லொடு மல்ல ரெற்ற வாட்படை வாளோ டெற்றக்
கொல்களி யானை யோடு தேர்களும் தம்மில் எற்ற
நல்லுளைப் புரவி யோடு புரவிநாட் செய்த போரே.

விற்படைகள் விற்படைகளுடனும், வேல் படைகள் வேற்படைகளுடனும், வாள் கொண்டு போர் புரிவோர் தங்களுக்கு நிகரானவர்களுடனும் தாக்கினர். மல்லர்கள் மல்லர்களுடன் தோள்களால் மோதினர். தேர்ப்படை சினம் மிக்க யானைப் படைகளுடன் மோதத்தலைப்பட்டன. போர்க் குதிரைகள் குதிரைகளுடன் நெருக்கின, இவ்வாறு போர் ஆரம்பமாகியது.

903. கால்பொரக் கதலிக் கானம் கடிதுடன் மடிந்த தேபோல்
கோல்பொரக் கொடியின் ஈட்டம் குடையொடும் அற்று வீழ்ந்த
வேல்பொரக் குருதிக் கும்பிக் குமிழிவிட் டெழுந்த நீல
மால்வரை செங்கற் றாதின் குமிழிவந் தெழந்த தொன்றே.

பெருங்காற்று மோதும் போது வாழைத் தோட்டம் எவ்வாறு பூ, குலை, இலைகளுடன் வேரற்றுச் சாயுமோ அதுபோல் அம்புகளின் வேகத் தாக்குதலால் கொடிகளும், குடைகளும் அற்றுச் சாய்ந்தன. வேல்கள் தாக்கியதால் யானைகளின் நெற்றியிலிருந்து குருதியானது கொப்புளித்துப் பொங்கியது. இக்காட்சி பெரிய மலையிலிருந்து சாதி லிங்கக் குழம்பு வெளிப்பட்டு குமிழியிட்டு வழிந்ததற் கொப்பாகும்.

904. விற்படை சரங்கள் வீழ்ந்து மேகங்கள் போல மாய்ந்த
மற்படை யுடன்றெ ழுந்து மடங்கல்போல் பொருது மாய்ந்த
வெற்பகம் பிளந்த வைவாள் எழிலியின் மின்னைப் போன்ற
கொற்றவர் குடைக ளேந்தி நடந்தது குருதி யாறே.

விற்படை வீரர்களால் எய்யப்பட்ட அம்புகள் மேகம் மழை பொழிவது போல் மாறி மாறி வீழ்தலால் படைகள் மாய்ந்தன. மற்படை வீரர்கள் சிங்கங்கள் போல் சினந்தெழுந்து மோதிப் பொருது அழிந்தனர். யானைகளின் உடலை ஊடுருவிப் பிளந்த வாள்கள் மேகத்தினிடையே மின்னற்கொடி நிகர்த்தன. இரத்த ஆறு வேந்தர்களின் வெண் கொற்றக் குடைகளை இழுத்துச் சென்றது.

905. கால்பொரப் பெண்ணை நெற்றிக் கனிகள்போல் தலைகள் வீழ்ந்த
கோல்பொரக் குளித்த யானைக் குருவிசேர் குன்ற மொத்த
வேல்பொரக் கிடந்த வீரர் வேற்கணார் விழும நோயின்
மால்பொரக் கிடந்த நெஞ்சின் மைந்தர்போல் மயங்கி னாரே.

பலமாக அடித்தக் காற்றில் பனம் பழங்கள் கொட்டுவது போல படை வீரர்களின் தலைகள் பூமியில் வீழ்ந்தன. உடல் முழுதும் தைத்த அம்புகளோடு காணப்பட்ட யானைகள் குருவிகள் அமர்ந்து நிறைந்திருந்த குன்றுகள் போல் காட்சியளித்தன. வேலால் தாக்கப்பட்டு மூச்சற்றுக் கிடந்த வீரர்கள் வேல் போன்ற அழகிய பெண்கள் பால் கொண்ட காம மயக்கத்தால் செய்வதறியாது காம நோயால் மயங்கிக் கிடப்பவர்களைப் போலாயினர்.

906. உருமிடிப் புண்ட நீல மலையென உருண்ட வேழம்
வரைமிசைப் பருதி போல மன்னவர் வந்து வீழ்ந்தார்
கரைபொரு கலங்கள் போலத் தேர்த்தொகை விழுந்து போன
புரவிகள் கரையைச் சார்ந்த திரையெனப் பொருது மாய்ந்த.

இடியினால் இடிந்து விழும் நீல மலைபோல் யானைகள் உருண்டன. பர்வதங்கள் மீது இருக்கும் சூரியன் போல் யானை மேல் இருந்த மன்னர்கள் விழுந்தார்கள். கரை தட்டிய கப்பல்கள் போல், தேர்கள் சாய்ந்தன. கரை மோதிய அலைகள் போல் குதிரைகள் பொருது மாய்ந்தன.

907. கொற்றவேல் மன்னர் வேழ கும்பத்தைத் தழுவி வீழ்ந்தார்
வெற்றிப்பொற் கொடியின் கொங்கை மேவினார் தம்மை ஒத்தார்
அற்றதோர் கேடகத்தை கவ்விய நரி கண் ணாடிப்
பற்றிய குறளி சொல்வாள் தன்முகம் பார்த்த போலும்.

யானையின் மத்தகத்தைத் தழுவியவாறு வீழ்ந்த வெற்றிவேல் வேந்தர்கள், வெற்றி மகளின் தனங்களைத் தழுவியர்களை ஒத்தார்கள். கேடயத்தைப் பிடித்த கை கீழே விழ அதைக் கவ்வியோடும் நரிகள் கண்ணாடியைக் கையில் எடுத்துக்கொண்டு நடந்தவாறு தனது முகம் பார்க்கும் குள்ளமான தாதிப் பெண்களை நிகர்த்தன.

908. விழுந்துடன் கிடந்த வேழம் விட்டமூர்ச் சனைகள் பாந்தள்
செழுங்குகைச் சிறிது போந்து சீறுவ தொக்கும் போரில்
அழிந்துடன் கிடந்த வீரர் அருகுசெல் நரியைக் கண்டு
முழஞ்சிடை உறங்கும் சிங்கம் முனிவதே போல்மு ரன்றார்.

குற்றுயிருடன் கீழே விழுந்து கிடந்த யானைகள் வலி தாளாது விட்ட பெருமூச்சானது, குகைக்குள் இருந்து தலையைச் சிறிது வெளியே நீட்டிச் சீறும் மலைப் பாம்பின் சீற்றத்தின் ஒலியை ஒத்திருந்தது. போரில் பலமழிந்து குற்றுயிராய் விழுந்து கிடந்த வீரர்களின் அருகில் சென்ற நரிகளைக் கண்டு அவர்கள் குகைக்குள் இருக்கும் சிங்கத்தைப் போல் உருமினார்கள்.

909. வாசிகள் உலக்க வாளி பாய்ந்திட மனம் கலங்கி
வீசின பாதம் மேலாய் விழுந்தன வருடை போன்ற
பூசலில் பொன்றும் வீரர் துறக்கமாம் என்னும் பொய்ந்நூல்
ஆசையால் பொருது வீழ்ந்தார் அரம்பையர் ஆர்வத் தாலே.

அம்புகள் ஊடுருவியதால் பலமிழந்த போர்க் குதிரைகள் கால்கள் மேல் நோக்கிய நிலையில் விழுந்து கிடந்த தோற்றம், வருடை என்னும் மலை மான்கள் விழுந்து கிடப்பதைப் போல் காட்சியளித்தன. போரில் இறப்போர் வீர சுவர்க்கம் அடைவர் என்று கூறும் பொய்யான நூல் உரையை நம்பி அந்த ஆசையில் தேவ மகளிரை அடையலாம் என்று வீழ்ந்தோர் பலர்.

910. கடல்கவர்ந் தெழுந்து பெய்யும் காரெனச் சாபங் கான்ற
படுகணை மாரிக் கஞ்சிப் பலன்கெடப் பலன்வந் தன்று
குடரடைக் கொளுவி யொன்னார் உடலெனும் கொழும்புல் சாயப்
படைமடுத் துழுது வெம்போர்ப் புலம்படு சேறு செய்தான்.

கடல் நீரை முகந்து விண்ணிலெழுந்து மண்ணில் மழையைப் பொழியும் கார்முகில் போல், வில்லிலிருந்து வெளிப்பட்ட கொடிய அம்பு மாரிக்கு அஞ்சி, நடுங்கி பலதேவ வாசுதேவப்படை, பலம் இழந்து பின்னடைய, அதைக் கண்ட பலதேவன் போர்க்களம் நுழைந்து பகைவருடைய உடல்கள் என்னும் புற்கள் சாயும்படி குடலை அறுக்கும் படையை ஏவி போர்க்களமாகிய நிலத்தை உழுது இரத்தச் சேறாக்கினான்.

911. காற்றெறி கடலிற் பொங்கிக் காற்படை உடையக் காணா
மாற்றவன் கூற்றம் போல வடிநுனைப் பகழி நூறித்
தோற்றினான் தோற்று வீரர் தொடுபடை யிட்டுத் தத்தம்
கால்பயன் கொண்டு போனார் காவலர் அதனைக் காணா.

காற்றால் மோதப்பட்ட கடல் நீரைப் போல் தனது படைகள் நிலை கெட்டுத் தோற்றோடுவதைக் கண்ட பகைவனாகிய பிரதிவாசுதேவன், யமனைப் போல் வெகுண்டு கூரிய கணைகளைப் பொழிந்து போர்க்களத்தே தோன்றினான். அதைக் கண்ட தமது வீரர்கள் தத்தம் போர்க்கருவிகளைக் களத்தில் போட்டு கால் பலம் கொண்ட வேகத்தில் ஓடியதைச் சகோதரர் இருவரும் கண்டனர்.

912. எரிஉரும் என்னச் சீறி இடம்சிலை யேந்து மெல்லைச்
சுரியுளைச் செங்கண் பேழ்வாய்ச் சீயமும் தோன்ற ஏறி
வரிசிலை குனிய அப்பு மாரி யப்பலன் படைத்தான்
செருவிளைத் துடைந்த வீரர் சேணிமேல் வினைகள் ஒத்தார்.

அனல் கக்கும் இடியை சீறி இடக்கையில் வில்லை ஏந்திய சமயத்தில் பலதேவனுக்கு முன்னால் சுருண்ட பிடரி மயிரையும் பிளந்த வாயினையுமுடைய ஒரு சிங்கத்தின் உருவில் தேவதை நிற்க அதன்மீது அமர்ந்து, தனது வரிந்து கட்டிய வில்லை வளைத்து அம்பு மழை பொழிந்தான். அது கண்டு போருக்கஞ்சி ஓடிய வீரர்கள், பான்மையுடன் உயர் நிலையில் செல்லுங்கால், உடைந்தோடும் வினைகளை நிகர்த்தாகள்.

913. பாறுமேல் பறந்த தெங்கும் பருதியும் கரந்த தங்கே
சேறுபட் டௗற தாகிச் செருக்களம் செல்லல் நீங்க
மாறெதிர்ந் தவனைக் காணா மறிந்ததன் சேனைக் காணாச்
சீறினன் கருட னேறிச் சென்றுகே சவன் எதிர்ந்தான்.

பலர் சிதைந்ததால் ஊன் உண்ணும் பருந்துகள் விண்ணில் வட்டமிட்டன. அவற்றின் மிகுதியால் கதிரவன் மறைக்கப்பட்டான். போர்க்கள மெங்கும் இரத்தச்சேறாகி நடக்க இயலாமல் சறுக்கியது. தங்களை எதிர்த்துப் போர் புரியும் பிரதிவாசுதேவனையும், போரில் பின்னடையும் தமது படைகளையும் கண்ட வாசுதேவன் மிகவும் சினந்து தனக்காக வந்த கருடதேவன் மீதமர்ந்து எதிரியைத் தாக்கினான்.

914. அருக்கன்வந் துதயம் ஏற மதியொளி அவிவ தேபோல்
திருக்கிளர் கருடன் மேல்அக் கேசவன் தோன்றச் சிந்தி
வெருக்கொண்டு சேனை ஓட வீழ்ந்தொளி மதியின் நின்றான்
உருத்தெழு காலன் போல உடன்று சக்கரத்தை விட்டான்.

உதய கிரியில் பகலவன் தோன்றியவுடன் முழுமதியின் ஒளி மங்குவது போல், அழகு பொங்கும் கருடன் மீது வாசுதேவன் தோன்றியதைக் கண்டு அச்சமடைந்த படைகள் ஓட மங்கிய மதியைப் போல், புண்ணிய பலம் குன்றி நின்ற பிரதிவாசுதேவன் யமன் போல் மிக்க சினத்துடன் தெய்வீகச் சக்கரப் படையை வாசுதேவன் மேல் செலுத்தினான்.

915. படைநடுக் கடலில் செல்லும் பருதிபோல் ஆழி செல்ல
முடிமன்னர் நடுங்கி யிட்டார் முதுகிட்டது அரசர் சேனை
படைமன்னர் ஆர்த்தெ ழுந்தார் மாற்றவன் பக்கத் துள்ளார்
மிடைகதி ராழி மேருச் சூழ்வரும் பருதி போல.

அந்தச் சக்கரப் படையானது கடல் மீது செல்லும் கதிரவனைப் போல், சேனைகளின் மேலாகச் செல்வதைக் கண்ட வாசுதேவனுடைய துணை வேந்தர்கள் கதிகலங்கி புறம் கண்டார்கள். எதிரிக்குத் துணையாக நின்ற அரசர்களும் படை வீரரும் மகிழ்ச்சிப்பெருக்கால் ஆராவாரம் செய்தனர். இந்நிலையில்,

916. கேசவன் தன்னைச் சூழ்ந்து வலப்பக்கம் கெழுமக் கண்டு
பேசொணா வகையின் ஆழி பிடித்தவன் திரித்து விட்டான்
மூசுதேன் கவசம் கீண்டு மொய்வரை மார்பு புக்குத்
தேசறத் துருவி ஓடித் திசைவிளக் குறுத்த தன்றே.

ஒளிமிக்க சக்ராயுதம் மேருவைச் சுற்றி வரும் சூரியனைப் போல் வந்து, வாசுதேவனாகிய விபீஷணனை வலஞ்செய்து அவனுடைய வலது பக்கத்தில் அமைதியாக நின்றது. அதைக் கண்டு மகிழ்ந்த வாசுதேவன் அளவிடற்கரிய அப்படையைத் தனது கையால் பற்றித் திருப்பி எதிரியின் மீது ஏவினான். விரைந்து சென்ற சக்கரம், பிரதி வாசுதேவனுடைய அழகிய மார்புக் கவசத்தைப் பிளந்து, வலிமை மிக்க அவனுடைய மலை போன்ற மார்பில் புகுந்துத் துளைத்து அவனது புகழையும், உயிரையும் ஒருங்கே வாங்கி மிக்க ஒளியுடன் திரும்பியது.

917. கருமுகில் உருமின் ஓடிக் கேசவன் கையில் ஆழி
உருமிடிப் புண்ட நீல மலையிலொன் னானை வீழ்ப்ப
இருள்பரந் திட்ட தெங்கும் யாவரும் நடுங்கி வீழ்ந்தார்
ஒருவர்கண் நின்ற துண்டோ திரு என உரைத்திட்டாரே.

வாசுதேவன் கையினின்று, மேக முழக்கத்தைப் போல் முழங்கிச் சென்ற சக்கரம் எதிரியை இடியுண்ட மலை போல் வீழ்த்தியவுடன், எதிரிகள் பக்கம் துன்ப இருள் சூழ்ந்தது. அனைவரும் அச்சமுற்று மயங்கிச் சாய்ந்தனர். அதைக் கண்டோர், திருமகள் ஒரு இடத்தில் நிலைத்திருந்தது உண்டோ என வியந்துரைத்தனர்.

918. மலைமிசை மதியின் நீழல் பருதிபோல் மத்த யானைத்
தலைமிசைக் குடையின் நீழல் தரணியை முழுது மாண்டார்
நிலமிசை இன்று காறும் நின்றவ ரில்லை யேனும்
தலைவனைத் தானிவ் வாழி தடிந்தது கொடிது இதென்றார்.

மலைமீது சந்திரனுடைய நிழலிலே இருந்து ஒளி பரப்பும் கதிரவன் போல், மதம் மிக்க யானையின் மேல் வெண்கொற்றக் குடை நிழல் அமர்ந்து, உலகம் முழுமையும் ஆண்ட மன்னர்களில் யாரும் இதுவரை நிலைத்திருந்ததில்லை என்றாலும், தலைவனையே கொன்ற இந்தச் சக்கரத்தின் செயல் கொடியது என்றும் பேசினர்.

919. கருடனை இழிந்து கைமா மிசைவந்து புரோதன் காட்டக்
குரவர்கள் உறையும் கோடி சிலையினை வலம்வந் தேத்திப்
பெரியவன் நின்ற போழ்தின் வேந்தர்விஞ் சையர்கள் விண்ணோர்
தருதிறை யோடும் வந்து தாழ்ந்தடி பரவி னாரே.

கருடனை விட்டிறங்கிய வாசுதேவன் யானை மீதிவர்ந்து புரோகிதர்கள் அழைத்துச்செல்ல, மாமுனிவர்கள் தவமியற்றும் 'கோடி மலை' என்னும் மலையை யடைந்து தனது வலது கரத்தால் அம்மலையை ஏந்தி அம் மாவீரன் நின்றான். அதைக் கண்ட விஞ்சையர்களும், விண்ணவரும், மண்ணுலக வேந்தரும் வியப்பெய்தி அடிபணிந்து திறை செலுத்திப் புகழ்ந்தேத்தினர்.

920. மலரென மலையை ஏந்தி வைத்தவன் மன்னர் சூழ
அலர்கதி ராழிபின் போய்த் திசையடிப் படுத்து மீண்டு
நிலமகள் திலகம் போலும் அயோத்திமா புரத்து நீல
மலையொடு மதியம் போல மன்னவர் துன்னி னாரே.

ஏந்திய மலையை ஒரு மலர் போல இருந்த இடத்திலே வைத்துவிட்டு, சக்கரப் படை முன்னே செல்ல தனது படைகளுடனும், மன்னர்களுடனும் திக் விஜயம் செய்து மற்ற மன்னர்களை தன்னடிப்படுத்தி நில மகளுக்குத் திலகம் போன்ற அயோத்தி நகரத்திற்கு நீல மலையுடன் முழுமதி இணைந்து வருவது போல் வாசுதேவ பலதேவரிருவரும் வந்தடைந்தார்கள்.

921. மதியோடு கரிய மேகம் கண்டமாக் கடலைப் போலப்
பதியவர் காதல் பொங்கப் பார்த்திபர் புக்க போழ்தின்
விதியறி புலவர் சூழ்ந்து வெற்றிச்சீ யாச னத்து
மதியன்ன குடையின் நீழல் வைத்துச் சாமரைகள் வீச.

முழுமதியுடன் கார்மேகத்தை ஒருங்கே கண்ட கடல் பொங்குவது போல் மன்னர்கள் இருவரையும் கண்ட நகர மக்கள் மகிழ்ச்சியால் பொங்கினர். முறையறிந்த அந்தணப் புலவர்கள் வெற்றி அரியணையில் அரசர்களை அமரச் செய்து கவரி வீசினர்.

922. பாற்கடல் பரவைத் தெண்ணீர்ப் பருதியின் படிய கும்பம்
ஆற்ற ஆயிரத்தோ ரெட்டின் அமரரால் ஏந்தப் பட்ட
நூற்கடல் கேள்வி யார்கள் நுனித்த மந்திரங்கள் சொல்லி
ஏற்றவாறு ஆட்டி னார்கள் ஏத்தினார் பார்த்தி வேந்தர்.

கதிரவன் ஒளிபோல் விளங்கும் குடங்கள் ஆயிரத்து எட்டில் பாற்கடல் நீரை அமரர்கள் ஏந்தி நிற்க, நூற் கடலைக் கடந்து நுட்பமாக அறிந்த மந்திரங்களை அந்தணர்கள் ஓதி நீராட்டினார்கள். மண்ணுலக அரசர்கள் அனைவரும் போற்றிப் புகழ்ந்தார்கள்.

923. முடிஅதன் பின்அ ணிந்தார் முரசங்கள் முழங்க மும்மைப்
படிமிசை அரசர் ஈரெண் ணாயிரர் பணிய விஞ்சைத்
தடவரை அரசர் ஐம்பத் தஞ்சினுக் கிரட்டி தாழப்
படரொளி பரப்ப எண்ணா யிரவர்விண் ணோர்ப ணிந்தார்.

திரை மறைவில் நீராட்டிய பிறகு எண்வகை முரசுகள் முழங்க முறைப்படி முடி சூட்டினார்கள். அப்போது மூவுலகத்திலுமுள்ள அரசர்கள் பதினாறாயிரம் பேரும், நூற்றுப்பத்து விஞ்சை வேந்தர்களும் கணபத்த தேவர்கள் எட்டாயிரம் பேர்களும், ஒளிவிளங்குமாறு வணங்கினார்கள்.

924. யானையின் தொகுதி நாற்பத் திரண்டுநூ றாயிரம் தேர்
மானமற் றதுவே வாசி ஒன்பதின் கோடி காலாள்
தானும்நாற் பத்தி ரண்டு கோடிதா னவர்கள் தேவர்
தானமா னங்கள் எண்ணா யிரம்அறு படையி தாமே.

பலதேவ வாசுதேவர்களுக்கு உரிய படையில், நாற்பத்திரண்டு லக்ஷம் யானைகளும், அதே அளவில் தேர்களும், குதிரைகள் ஒன்பது கோடியும், நாற்பத்திரண்டு கோடி படை வீரர்களும், விஞ்சையர் எட்டாயிரம் கணபத்த தேவர் எட்டாயிரம் இந்த அளவினையுடைய அறுவகைப் பிரிவுகள் அமைந்திருந்தன.

925. ஆழிவேல் தண்டு சங்கம் அருமணி வில்லு வைவாள்
ஏழுமா இரத னங்கள் ஏழாயிரம் அமரர் காப்ப
மாழைமே கலையின் மாதே வியர்எண்ணா யிரத்தி ரட்டி
வேழமேல் திறைகொண் டெய்தும் நாடுமே லுரைத்த தாமே.

இவர்கள் இருவரில் வாசுதேவனுக்கு சக்கரம், வேல், தண்டு, சங்கு, மணி, வில், சூரியவாள் இவை ஏழும் இரத்தினங்கள் எனப்படும். இவைகளை ஏழாயிரம் வியந்தர தேவர்கள் காவல் புரிந்தனர். இவனுக்குத் தேவியர் பொன் மேகலை யணிந்த மகளிர் பதினாறாயிர மாகும். யானைகளின் மேல் திறைப்பொருளை அனுப்பி வைக்கும் நாடுகளும் பதினாறாயிரம்.

926. மாலைத்தண்டு அமோகம் வாளி கலப்பையும் பலன வாகும்
நாலுநல் லியக்கர் நாலா யிரவர்காப் பியற்றிச் செல்வர்
ஏலவார் குழலின் மாதே வியரும் எண்ணா யிரவர்
மேலுலாம் மதியம் போலும் மேனியான் விரும்பப் பட்டார்.

முழுமதியைப் போன்ற வெண்ணிறமுடைய பலதேவனுக்கு, மணி மாலை, தண்டாயுதம், சக்திமிக்க பாணம், கலப்பை ஆயுதம் என நான்கு இரத்தினங்களாகும். இவற்றை நான்காயிரம் இயக்கர்கள் பாதுகாத்தனர். நறுமணச் சாந்தணிந்த நீண்ட கூந்தலையுடைய மங்கையர் எண்ணாயிரம்பேர் இவனுக்குத் தேவியராவர்.

927. கந்திலை நாட்டுக் கண்டம் மூன்றினில் காமர் செல்வத்து
இந்துவாண் நுதலி னாரோ டின்பநீர்க் கடலை யாடி
அந்தரத் திறைவன் போல ஆண்டுகள் பலவும் சென்றார்
வெந்திறல் களிற்று வேந்தன் விபீடணன் வியோக மானான்.

காந்திலை என்னும் மிகப்பெரிய தேசத்தின் மூன்று பகுதிகளுக்கும் மன்னராகி அதாவது அர்த்த சக்ரவர்த்திகளாகி, சந்திரன் போல் ஒளிமிக்க நெற்றியையுடைய அழகிய மகளிருடன் இன்பக் கடலில் மூழ்கி அமரேந்திரனைப் போல் பல ஆண்டுகள் வாழ்ந்தனர். அதன் பின் வலிமைமிக்க யானைகளையுடைய வாசுதேவன் ஆயுள் முடிந்து மரணமடைந்தினான்.

928. அருமணி இழந்த நாகம் போல்பவன் அலம்வந் தாற்றப்
பெருகிய துயர முற்றுப் பிறவியை வெருவிப் பின்னாள்
மருவிய பொருளும் நாடும் மைந்தர்கட்கு ஈந்து மாற்றை
விரகினால் எறியும் வீத ராகமா முனிவ னானான்.

வாசுதேவன் இறந்ததால் அருமணியை இழந்த நாகம் போல் மனம் கலங்கித் துயருற்று நின்ற வீத பயனாகிய பலதேவன் சில நாள்களுக்குப் பிறகு தனக்குரிய செல்வங்களையும் அரசையும் தனது மைந்தர்களிடம் ஒப்படைத்து இப்பிறவியை முறைப்படி கெடுக்கக்கூடிய ஆசையற்ற மிகப்பெரிய முனிவராகத் துறந்து சென்றான்.

929. வலம்புரி வண்ணன் ஆரா தனையினால் உடம்பு விட்டிட்டு
இலாந்தவ கற்பம் புக்கான் யானவன் இன்று வந்தேன்
புலங்கள் மேல் புரிந்து வீந்த கேசவன் புக்க தேசம்
இலங்கிப் போய்த்தீர யான் இந்நரகிற் கண்டுஇடரை யுற்றேன்.

வலம்புரிச் சங்கு போன்ற வெண்ணிறமுடைய பலதேவன் நான்கு வகையான உயர் பாவனைகளால் தனது உடலை நீத்து லாத்தவ கல்பத்து தேவனாயினன். அந்த அமரனாகிய நான் தான் இந்த பரிநிர்வான பூஜைக்கு வந்திருக்கின்றேன். புலன் இன்பங்களில் பெரிதும் பொருந்தி இருந்ததால், அந்த விபீஷணனராகிய வாசுதேவன் நரகத்தில் வீழ்ந்ததை எனது ஒதியால் உணர்ந்து அங்குச் சென்று அவனைக் கண்டுப் பெரிதும் வருந்தினேன். அடுத்து அவனுக்கு அறவுரை ஆற்றத் தொடங்கினேன். (என ஆதித்யாப தேவன் தரணேந்திரனிடம் கூறினான்).

பலதேவன் சுவர்க்கம் புக்க சருக்கம் முற்று பெற்றது.